# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

### ஸ்ரீ விகாரி வருடம் ஆனி மாதம் 19—ஆம் நாள் ஜீலை மாதம் 05.07.2019ம் நாள் வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள் விபரம்

| | | |
|---|---|---|
| **பொருள் எண். 1** | நகராட்சி ஆணையர் அவர்களின் ஜீன் —2019ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:—**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:—** 18<br>**தீர்மானம்:—** பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண். 2** | நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீன்—2019ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:—**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:—** 19<br>**தீர்மானம்:—** பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண். 3** | இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயக்கப்பட்டு வரும் கீழ் கண்டுள்ள வாகனங்களுக்கு 2019—2020ம் ஆண்டிற்கு உண்டான தகுதிச்சான்று பெறவும், ஆயுள் காப்பீடு பிரீமியம் செலுத்தவும் அனுமதிக்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00லட்சத்திற்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>1. டி.என்.55 டி. 7684 — ஈப்பு (கமாண்டர்)<br>2. டி.என். 55 டி 4245 — குடிநீர் டேங்கர் லாரி<br>3. டி.என். 55 எச். 4893 — குடிநீர் டில்லர்<br>4. டி.என். 55 இசட். 7684 — ஈப்பு (பொலிரோ)<br>5. டி.என். 55 ஏ.ஒய் 4797 — ஈப்பு (பொலிரோ) | **தீர்மான எண்:—** 20<br>**தீர்மானம்:—** அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td><u>அலுவலக குறிப்பு</u><br><br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்படி தொகை ரூ.10.00லட்சத்தினை பொது நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்</td><td></td></tr>
<tr><td><u>பொருள் எண். 4</u></td><td>அறந்தாங்கி நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு தூய்மை இந்தியா இயக்கம் ஐ.யு.டி.எம். நிதியின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26888/UGSS-2/2018–26 நாள்.29.01.2019 ன்படி ரூ.222.00 இலட்சம் மதிப்பீட்டில் புதுக்கோட்டை ரோட்டில் உள்ள கலவை உரக்கிடங்கின் உட்புரம் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி (Construction of 20 KLD Fecal Sludge Treatment Plant at Pudukkottai Road Compost Yard (SF No.4/2)) மேற்கொள்ள அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ள 28.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழிற்நுட்ப உறையினை திறந்து கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் உரிய தகுதிகளை கொண்டுள்ளதனை அடுத்து, 02.07.2019 அன்று விலை விபர உறையினை திறந்து ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டுள்ளவாறு.<br><br><table><tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>சதவிகிதம்</th></tr><tr><td>1)</td><td>ஸ்ரீ கணேஸ் & கம்பெனி,<br>135–17சி / 22, அண்ணா நகர்,<br>விராலிமலை ரோடு, மணப்பாறை</td><td>6.31 % அதிகம்</td></tr><tr><td>2)</td><td>எம்.முருகேசன் & கம்பெனி.,<br>ஈரோடு</td><td>8.39 % அதிகம்</td></tr></table><br>மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ கணேஸ் & கம்பெனி, மணப்பாறை, நிறுவனம் கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி (6.31 சதவீதம் அதிகம்) கொடுத்துள்ளார். மேற்படி கூடுதல் ஒப்பந்தப்புள்ளியினை மதிப்பீட்டு விலைக்குள் குறைத்து தர கோரியதில் 4.95 சதவீதமாக குறைத்துக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.</td><td><u>தீர்மான எண்:–</u> 21<br><u>தீர்மானம்:–</u> அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக் குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணிக்கு கணேஸ் அன்ட் கம்பெனி, மணப்பாறை நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.95 சதவிகிதம் அதிகமாக உள்ளதனை ஏற்கலாம்.<br>3. மேற்படி பணி திட்டபணியாதலால் மறுஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதமாதம் ஏற்படும் ஆகையால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேலும் மேற்படி கூடுதல் சதவீதம் நகர்மன்ற வரம்பிற்கு உட்பட்டுள்ளதால் அதனை ஏற்கலாம்.<br>4. மேலும் மதிப்பீட்டை விட கூடுதலாகும் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3100/2018/இ1) | |

ஓம்/–இரா.வினோத்
தனி அலுவலா்
அறந் தாங் கி நகராட் சி